கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

புரட்டாசி மாத இதழ்
NEWS BULLETIN
SEPTEMBER 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA முகவரியில் நடைபெற்று வருகின்றது
12/10/ 202	நவராத்திரி விழா STOKE COVENTRY CLUB ல் 12 மணிக்கு நடைபெறும்.
09/11/ 2024	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா COVENTRY COMMUNITY RESOURCE CENTRE ல் நடைபெறும்.

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	1.00pm – 2.00pm
SUNDAYS	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	10.00am – 12.00am





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் 2024

மேற்படி கூட்டமானது, 21/09/2024 அன்று 10.00 மணியளவில், தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரட்ணம் அவர்களின் தலைமையில், STOKE COVENTRY CLUB மண்டபத்தில் நடைபெற்றது. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினுடைய தோற்றம், வளர்ச்சி, யாப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி சங்கத்தின் தலைவரால் கருத்துரை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து செயலாளர் திரு ஸ்ரீநாதன் பகீரதன் அவர்களால் சங்கத்தினுடைய செயற்பாடுகள் பற்றிய அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் பொருளாளர் திரு நாகலிங்கம் சுகந்தன் அவர்களால் சங்கத்தின் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.







மேலும் தமிழ்ப் பாடசாலை மற்றும் கலைப் பாடங்களின் நிலைப்பாடுகள், பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பரீட்சைகள் பற்றிய கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு வைத்தியர் மதிப்புக்குரிய ஜெயரட்ணம் ஐயா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பெருமளவான பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். கலந்துகொண்ட அனைவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



புதிய நிர்வாக உறுப்பினர்கள்

தலைவர் – திரு. கந்தையா அரியரட்ணம்.
சிரேஷ்ட உபதலைவர் –
திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன்.
கனிஷ்ட உபதலைவர் -
திரு. விவேகானந்தம் விஜயரூபன்.
செயலாளர் – திரு. ஸ்ரீநாதன் பகீரதன்.
உப செயலாளர் – திருமதி ரஜனி ஜோன்சன்
பொருளாளர் – திரு. பத்மநாதன் ஆலவன்.
உபபொருளாளர்-திருமதி கலாநிதி உருத்திரன்

உறுப்பினர்களாக
திரு. மாணிக்கம் தவத்துரை.
திரு. மாயப்பெருமாள் நிகேதன்.
திரு நாகலிங்கம் சுகந்தன்.
திரு. மகாலிங்கம் திருவரங்கன்.
பாடசாலைப் பொறுப்பாளர்கள்
திரு. வள்ளி ரவீந்திரன்.
திரு. பீரிஸ் பிரதித்.
தமிழ்ப்பாட இணைப்பாளர் –
திருமதி. ஜெயரதி வரதராஜன்.
கலைப்பாட இணைப்பாளர் –
திருமதி. குந்தவி திருவரங்கன்.
விளையாட்டு இணைப்பாளர் –
திருமதி. விஜிதா ரவீந்திரன்.
வையகவிரிவு வலைஇணைப்பாளர் –
திரு. சந்தனராஜா பிரபுசங்கர்.
வெளிவிவகார இணைப்பாளர் – வெற்றிடம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இந்த வருடம் கேம்ப்ரிட்ஜ் சர்வதேச சாதாரணதர மற்றும் உயர்தர (CAMBRIDGE INTERNATIONAL A LEVEL & O LEVEL) தமிழ்ப் பாடப் பரீட்சைகளுக்குத் தோற்றிய அனைத்துக் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களும் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

செல்வி அர்ச்சனா ரமணன், செல்வி அபிநயா ரமணன், செல்வி மதுமிதா சிங்கராசா ஆகிய மாணவர்கள் CAMBRIDGE உயர்தரப் பரீட்சையில் A*, A ஐயும், செல்வன் திரிசாந் கேதீஸ்வரன், செல்வி யதுர்ஷனா ரவிகாந்தன் ஆகிய மாணவர்கள் CAMBRIDGE சாதாரண தரப் பரீட்சையில் A* B ஐயும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கும், கற்பித்த ஆசிரியர்கள், மற்றும் பக்கபலமாக இருந்த பெற்றோர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்மொழிக் கலைக் கழகத்தில், சிறு வயது முதல் தமிழ்ப் பாடத்தையும், கலைப்பாடங்களையும் கற்று "கலாஜோதி" பட்டங்களையும் பெற்ற செல்வி மேனகா சர்வானந்தலிங்கம், முதற்தரப் பல்கலைக்கழகமான OXFORD UNIVERSITY க்கு, மருத்துவத் துறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கராத்தே சுற்றுப்போட்டி

கடந்த மாதம் SYDNEY STRINGER ACADEMYல் நடைபெற்ற காராத்தே சுற்றுப்போட்டியில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக கராத்தே ஆசிரியர் திரு பிரதித் பீரிஸ் அவர்களின் மாணவர்கள் கலந்துகொண்டு, போட்டிகளில் வெற்றிபெற்று பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களைத் தமதாக்கியுள்ளார்கள்.







அதுமட்டுமன்றி, போட்டியிட்ட அனைத்து மாணவர்களும் அடுத்த கட்டத்துக்குரிய நிறப் பட்டிகளையும் (GRADING BELTS) பெற்றுக் கொண்டார்கள். இலவசமாக, பிரதி சனிக்கிழமைகளில் கராத்தே பயிற்றுவித்து வரும் கராத்தே ஆசிரியர் திரு பிரதித் பீரிஸ் அவர்களுக்கும், மாணவர்களுக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.



ஈழத்துப் புலமைகள் (பாகம் 23)

கடந்த இத்திலே
சரவணமுத்து புலவர் அவர்களைப் பற்றிய குரிப்புகளைப் பார்த்திருந்தோம்.
இஇதழிலே ,
பல புலவர்களின் சரிதக்குறிப்புகளை பார்க்க வேண்டியுள்ளது,பல புலவர்களின் பெயரையும் சில சில வாழ்க்கை குறிப்புகளையுமே தரக்கூடியதாக உள்ளது.

அவர்களின் முழுமையான தகவல்களை சேகரிக்க முடியவில்லை.

1. ஏகாம்பரப் புலவர் :யாழ்ப்பாணம் ,உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த வல்லிபட்டித்துறை (வல்வெட்டித்துறை என தற்போது அழைக்கப் படும இடம்) எனும் ஊரிலே பிறந்தவர்.என்பர். இவரது தாய் தந்தையர் விபரங்கள் எளை அறியமுடியவில்லை. இருபாலை சேனாதிராய முதலியாரிடமும் ,திதருத்தணிகை சரவணப்பெருமாள் ஐயரிடமும் பாடங்கற்றவர். என்பர். கந்தரந்தாதிக்கு உரை எழுதியவர்.இவரது வேறு ஆக்கங்கள் கிடத்தில.சேனாதிராயர் காலமே இவரதுகாலமாகும்.

2. கார்த்திகேய ஐயர்::யாழ் நல்லூர் வேங்கடாசலபதி ஐய்ருக்கு மகனாகப் பிறந்தவர்.இருபாலை சேனாதிரய முதலியாரிடம் கல்வி கற்றவர்.தமிழ்,ஆங்கிலம்,சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். வேதாந்த சித்தாந்த நூல்களில் புலமை பெற்றவர்.வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஆறுமுக நாவலருடன் பலபிரசங்கங்களை நடாத்தியவர் என்பர்.

3.சம்பந்த புலவர்:
சம்பந்தபுலவர் ,யாழ்ப்பாணம்,நல்லூரில் வாழ்ந்த வேலாயுத முதலியாரின் மகனாவார்.ஆறுமுக நாவலரின் நண்பராவார்.இவர் இருபாலை சேனாதிராய முதலியாரிடமும் பின்னர்

சரவணமுத்துப் புலவரிடத்துமிலக்கிய இலக்கணங்களை கற்றுத்தேர்ந்தவர்.
உடுப்பிட்டி சிவசம்பு புலவர்,புன்னாலைக்கட்டுவன் செந்தினாதையர் ஆகியோரும் இவரது மாணாக்கர்களில் சிலர்.இவர் கதிர்காமக்கந்தன் மீது பலகீர்த்தனைகளைப் பாடியதாக அறியக்கிடக்கிறது.

(அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
திரு தவத்துரை மாணிக்கம் ஆசிரியர்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கமானது தமிழ் மக்களுக்கு உதவும் நோக்கோடு, 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, ஒரு அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையாக இங்கிலாந்திலும், வேல்சிலும் பதிவுஎண் 1093924 ன் கீழ்ப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எதிர் நோக்கும் நடைமுறைப் பிரச்சனைகளுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறக்கட்டளையானது, பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றது.

வளர்ந்துவரும் இளஞ் சமுதாயத்தின் மத்தியில் எமது தாய்மொழி தமிழைக் கற்பிப்பதும், எமது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதையும் அனுபவமும் தகுதியும் மிக்க ஆசிரியர்களால் வார இறுதி நாட்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், மிருதங்கம், வீணை, வயலின், சுரத்தட்டு, என்பவற்றோடு, கராத் மற்றும் யோகா வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.



அதுமட்டுமல்லாமல், இளம் கலைமானி மற்றும் முதுகலைமானி போன்ற பட்டப் படிப்புகளைத் தமிழில் மேற்கொள்வதற்கு தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாகவும் செயற்பட்டு வருகின்றது.

பிரித்தானிய பிரஜாவுரிமை, கடவுச்சீட்டு, வீசா, பாடசாலை அனுமதி, வங்கிக்கடன் போன்றவற்றுக்கு உரிய விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதோடு, அவற்றை உறுதிப்படுத்திக் கையொப்பங்களை இடும் சேவைகளையும், சட்ட ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றது.